அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சென்னை நகரில் ஏற்பட்டிருக்கிற சில நிலைமைகளில்—இது அரசியலுக்கு அப்பாற்பட்டது, இது ஒரு சமுதாயப் பிரச்சினை—நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பும்போது இப்படிப் பட்ட விவாதத்தை இந்த மன்றத்தில் அனுமதிக்கலாமா? விதி முறைகளின்படி இது சரியா? எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் சம்மதத்தைப் பெற்றுத்தான் பேசுகிறாரா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொதுவாக எந்தெந்தத் துறைக்கு மானியம் கேட்கப்பட்டிருக்கிறதோ அது பற்றி மட்டும்தான் பேச வேண்டும். இங்கு போலீஸ் என்ற 12-வது நிதிக் கோரிக்கையின் கீழ் போலீஸ், ஸிட்டி எக்ஸிக்யூட் டீவ் ஃபோர்ஸ் என்றிருப்பதால் அதுபற்றிப் பேசுவது முறைதான்.

முற்பகல் 11-00 **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** சப்பிளிமெண்டரி கிராண்ட்மீது பேசும்பொழுது ஒரு வரம்பிற்கு உட்பட்டு நிற்க வேண்டும். அவ்வாறு ஒரு வரம்பிற்கு உட்பட்டு பேச வேண்டுமே தவிர சட்டம், அமைதியைப் பற்றிப் பேசுவது என்பது அல்ல. அதையும் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அமைச்சரவர்கள், எதிர்க் கட்சித் தலைவரின் உடன்பாட்டின்மீது பேசினாரா என்று கேட்டார்கள். அவர்கள் பேசும்பொழுது எந்தவிதமான உணர்ச்சியையும் தூண்டி விடாத முறையிலே பொதுவாகத்தான் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். நீதி விசாரணை என்று போட்டுவிட்டார்கள். அதன் பிறகு அமைச்சரவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக் கிறார்கள். ஆகவே, பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கும் இருக்கிறது. சில அமைச்சர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருப்பதால் காங்கிரசின் நிலை என்ன, எங்கள் கருத்துக்கள் என்ன என்பதையும் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கும் இருக்கிறது. வன்முறைகளைத் தூண்டி விட வேண்டாமென்ற நிலைதான் இருக்கிறது.

MR. DEPUTY SPEAKER: If an Appropriation Bill is in pursuance of a supplementary grant in respect of an existing service, the discussions shall be confined to the items constituting the same and no discussion shall be raised on the original grant nor the policy underlying it save in so far as it may be necessary to explain or illustrate a particular item under discussion.

ஆகவே பொதுவான விவாதத்தை மானியக் கோரிக்கையின் போது எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மேலும் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றிப் பலதரப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் அமைதியான நிலையை உருவாக்க வேண்டுமென்று கூறியிருக் கிறார்கள். எனவே, இதை விரிவுபடுத்திப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளு ன்றேன்.

1968 மார்ச் 27]

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய வெட்டுத்தீர்மானத்தின் நோக்கமே இந்தப் பிரச்சினையை எந்த அளவுக்குப் பேசலாம் என்பதைத் தெளிவுபடுத்துவதாக இருக்கிறது. அதைவிட்டு வேறு விவாதத்தில் இறங்க விரும்பவில்லை. அமைதியைப் பொறுத்தவரையில் இந்த அவையிலே நல்லமுறையில் முடிவெடுக்கப்பட வேண்டுமென்று இந்த அரசுக்கும், முதலமைச்சரவர்களுக்கும் எங்கள் கட்சியினர் பூரண ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறோம். அவ்வாறு எங்கள் கட்சி ஒத்துக்கொண்டதையே எங்கள் கட்சியின் பலவீனமாகக் காட்ட சில பத்திரிகைகள் திருப்பப்பட்டிருக்கிறது என்பதையும், இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மீண்டும், மீண்டும் அதைப்பற்றியே பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திரு. க. இராமமூர்த்தி : வன்முறை நிகழ்ச்சிகளைப்பற்றி ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சரவர்களின் அறிக்கையில், 25-ம் தேதி நடந்த நிகழ்ச்சிகள் குறித்து ஒரு நீதி விசாரணை நடத்தப்போவதாக அறிவித்திருந்தார்கள்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Is it order?

திரு. க. இராமமூர்த்தி : நான் சொல்வதெல்லாம் ஒரு நிகழ்ச்சியை மட்டும் நீதிவிசாரணைக்கு அனுப்பக்கூடாது. யார் தவறு செய்திருந்தாலும் . . .

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உதவி சபாநாயகரவர்களே, விதிமுறையைப் படித்துக் காட்டினீர்கள். அனுமதியிருந்தால் தாராளமாக அனுமதிக்க உங்களுக்கு அதிகாரமுள்ளது. அதைப்பற்றிச் சொல்லவில்லை. உபமானியக் கோரிக்கையின் போது இப்படிப்பட்ட பொதுவான விவாதத்தை எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். அதன்படி இருக்கிறதா என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : துணை மானியக் கோரிக்கையின்போது எதையெதைப்பற்றிப் பேசலாம் என்று தலைவரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உறுப்பினரும் அதை உணர்ந்து பேசுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதோடு தொடர்புபடுத்திக்கொண்டு வேறு பல பிரச்சினைகளைப் பேசுகிறார்கள். அந்தப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசும்பொழுது அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், நாம் மேற்கொண்டிருக்கும் அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கத்திற்கு ஏற்ப அமைய வேண்டும். ஒரு கட்சியின்மீது இன்னொரு கட்சி குற்றம்சாட்டிப் பேச வேண்டுமென்று கருதினால் அதற்கு நிரம்ப நாட்கள் கிடைக்கும். ஆனால் இப்பொழுதிருக்கும் சூழ்நிலையில் அவைகள் தேவையில்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.